120—

பேருந்து வசதி

***2029—திரு. க. பாண்டியராஜன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆவடி பேருந்து நிலையத்திலிருந்து பிற மாவட்டங்களுக்கு நேரடிப் பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆவடியிலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையத்திலிருந்து அனைத்து மாவட்டங்களுக்கும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாகப் பேருந்துகள் இயக்கப்பட்டுவரும் நிலையில், ஆவடி பேருந்து நிலையத்திலிருந்து பிற மாவட்டங்களுக்கு நேரடியாகப் பேருந்துகள் இயக்கும் தேவை எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணங்கி நிற்கும் கரங்கள் விலகும்முன்னே வரம் தரும் தெய்வம்போல (மேசையைத் தட்டும் ஒலி) புலராதோ விடியல் எனப் போராடும் ஏழைகளுக்கு புதுப் பாதை வகுத்துத் தரும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களினால் சென்னையைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிகள் உன்னதமாக வளர்ச்சியடைந்து வருகின்றன. அதில் முக்கியமாக சென்னையின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள ஆவடி தொகுதியைச் சுற்றி அம்பத்தூர், திருமுல்லைவாயில், காக்களூர், திருமழிசை ஆகிய இடங்களில் நான்கு பெரும் தொழிற்பேட்டைகள்*

அமைந்துள்ளன. இதில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்து பணிபுரிகின்றனர். மத்திய அரசாங்கத்தின் இராணுவத் தளவாடங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் H.V.F., C.V.R.D.E, O.C.F., E.F.A. உள்ளிட்ட பெருநிறுவனங்கள் இங்கே அமைந்துள்ளன. இவற்றில் சுமார் இருபத்தைந்தாயிரம் தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவற்றில் பணிபுரியும் வெளி மாநிலங்கள் / வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் தங்கள் சொந்த ஊர்களுக்குச் செல்ல வேண்டுமென்றால் 20 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சென்னை புறநகர் பேருந்து நிலையத்திற்குச் சென்று, அங்கிருந்து 30 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள வண்டலூரரை அடைய வேண்டுமென்றால் 50 கிலோ மீட்டர் பயணம் செய்து போக்குவரத்து நெரிசலின் காரணமாக மூன்று மணி நேரம் பயணிக்க வேண்டியுள்ளது. அதற்கு மாற்றாக ஆவடியிலிருந்து பிற மாவட்டங்களுக்கும் பிற மாநிலங்களுக்கும் நெமிலிச்சேரி-வண்டலூர் ஆறு வழிச் சாலை மார்க்கமாகப் பேருந்துகள் இயக்கப்பட்டால் 36 கிலோ மீட்டர் மட்டுமே பயணம் செய்ய நேரிடும். மேலும் பயண நேரம் மூன்று மணி நேரத்திலிருந்து 30 நிமிடங்களாகக் குறையும். எரிபொருளும், பயண நேரமும் மிக வெகுவாகக் குறையும். ஆகவே, ஏற்கெனவே ஆவடி-ராஜபாளையம் மார்க்கத்தில் அரசு போக்குவரத்துக் கழகம்மூலம் பேருந்து தினமும் வெற்றிகரமாக இயக்கப்படுகிறது. அடுத்தகட்டமாக ஆவடி பேருந்துப் பணிமனையிலிருந்து வண்டலூர் வழியாகத் தென் தமிழகத்திற்கு மதுரை, திருச்சி போன்ற இடங்களுக்கும், ஊட்டி, பெங்களூரு, கோவை போன்ற அதிக demand இருக்கும் இடங்களுக்கும் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பிற மாவட்டங்களுக்குப் பேருந்து இயக்கப்பட வேண்டுமென்பது. கோயம்பேடு பேருந்து நிலையம் மிகப் பெரிய பேருந்து நிலையம். அங்கிருந்து தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்துப் பகுதிகளுக்கும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

2016 ஆகஸ்ட் 30]

இருந்தபோதிலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை பரிசீலித்து, அந்தப் பகுதியிலிருந்து பயணம் செய்யக்கூடிய பயணிகளின் அடர்வுக்கேற்ப, தேவை ஏற்படுமாயின் அந்தப் பகுதியிலிருந்து பிற மாவட்டங்களுக்குப் பேருந்துகள் இயக்கப்படுவது பற்றி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. திருமுல்லைவாயில், திருவேற்காடு, திருநின்றவூர், கோவில்பதாகை ஆகிய ஆன்மிகத் திருத்தலங்கள் அடங்கிய இடம் ஆவடி. அதிகளவில் யாத்ரீகர்கள் வருகைப் புரிகின்றனர். அவர்கள் இங்கு வந்தபின், ஆந்திர மாநிலம் திருப்பதி சென்று தரிசனம் செய்ய பயணம் மேற்கொள்கின்றனர். அவர்கள் பயன்பெறும் வகையில் ஆவடி பேருந்து நிலையத்திலிருந்து திருமலை திருப்பதிக்கு பேருந்துகள் இயக்கப்படுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பிற மாநிலத்திற்குப் பேருந்து இயக்குவது சம்பந்தமானது. அந்த வகையிலே அந்த மாநிலத்துடன் ஏற்பட்டிருக்கக்கூடிய ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் பேருந்துகள் இயக்கப்பட முடியும். இருந்தபோதிலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை பரிசீலித்து, அதற்கு வாய்ப்பிருக்குமாயின் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கீழ்பெண்ணாத்தூர் தொகுதி தாலுகாவாக மாற்றப்பட்டிருக்கிறது. அந்தத் தாலுகாவிலே ஒரு புதிய பேருந்துப் பணிமனை ஆரம்பித்து, பல்வேறு கிராமங்களுக்குப் பேருந்து வசதிகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு போக்குவரத்துக் கழகங்களிலே டிக்கெட் வழங்குகிற மின்னணுப் பதிவு இயந்திரங்கள் பழுதாகி மீண்டும் டிக்கெட் போடுகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நடத்துநர்களுக்குப் புதிய மின்னணு இயந்திரங்களை வழங்க அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய பணிமனை பற்றிய கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். இது மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாத கேள்வியாக இருந்தாலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புதியதாக 74 பணிமனைகள் திறப்பதற்காக விதி 110-ன்கீழ் அறிவித்திருக்கிறார்கள். அவற்றில், 36 பணிமனைகள் ஏற்கெனவே மக்களின் பயன்பாட்டிற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் திறக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மீதமுள்ள பணிமனைகளுக்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொரு வினாவையும் கேட்டிருந்தார்கள். அந்தப் பகுதியிலே, இதுவரை பழுதாகியிருந்த மின்னணு டிக்கெட் இயந்திரங்களையெல்லாம் சரி செய்து கொடுத்திருக்கிறோம். மீதமுள்ள நடத்துநர்களுக்கும் மின்னணு டிக்கெட் இயந்திரங்களைக் கொடுப்பது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.

2016 ஆகஸ்ட் 30]

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரம் அடைந்து இவ்வளவு காலங்களுக்குப் பிறகும், நாங்குநேரி தொகுதியிலே, சிவந்திப்பட்டி ஊராட்சியிலுள்ள பத்மநாபபுரம் ஊர் மக்கள் இதுவரையிலும் பஸ்ஸை பார்க்கவில்லை. நான் ஏற்கெனவே அங்குள்ள M.D. அவர்களிடம் இதுகுறித்து மனு கொடுத்திருக்கிறேன். மேலும், நாச்சான்குளத்திற்கும் இதுவரை பஸ்ஸே போகவில்லை. அங்குள்ள மக்கள் பஸ்ஸை பார்க்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்வது அந்த ஊருக்குள்ளே பஸ்ஸை கொண்டுபோய் காட்டிவிட்டாலே சந்தோஷப்படுவேன். ஏற்கெனவே 23 ஊர்களுக்கு பஸ் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று மனு கொடுத்திருக்கிறேன். இப்போது அதையும் சேர்த்து, 37 ஊர்களுக்கு பஸ் வசதி கோரும் மனுக்கள் என் கையில் இருக்கின்றன. அந்த மனுக்களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கொடுத்துவிடுகிறேன். அந்த ஊர்களுக்கு பஸ் வசதி செய்து தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஸ்ஸே பார்க்காத ஊருக்கு சட்டமன்ற உறுப்பினராக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அதுவும், இரண்டாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, 2011 முதல் 2016 வரை 1,525 புதிய வழித்தடங்களை உருவாக்கி, அந்த வழித்தடங்களிலே பேருந்துகளை இயக்குவதற்கு ஆணையிட்டவர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதுமட்டுமல்ல, சென்ற தி.மு.க. ஆட்சியைவிட 1,728 பேருந்துகள் அதிகமாக இயக்கியவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே எந்தவொரு மாநிலத்திலும் இல்லாத வகையிலே, அனைத்துக் குக்கிராமங்களுக்கும்

பேருந்து வசதியைச் செய்து கொடுத்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கிராமத்திற்கு. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குற்றச்சாட்டு ஒன்றும் சொல்லவில்லை. பேருந்து இயக்கியதைப்பற்றிச் சொல்கிறார். (குறுக்கீடு) குற்றச்சாட்டு ஒன்றும் சொல்லவில்லை. பேருந்து இயக்கியதைப்பற்றிச் சொல்கிறார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்களாகக் கற்பனை செய்துகொள்ளாதீர்கள். பேருந்து இயக்கியிருக்கிறோம் என்றுதான் சொல்கிறார். (குறுக்கீடு) யாரும் உட்கார்ந்துகொண்டு பேசாதீர்கள். அமைச்சர், நீங்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: பதில் சொல்லித்தானே ஆகவேண்டும்? 1,525 புதிய வழித்தடங்கள் ஏற்படுத்திக் கொடுத்ததைப்பற்றிச் சொல்லாமல் வேறு என்ன சொல்வது? மாண்புமிகு அம்மா அவர்களுடைய சாதனைகளைப்பற்றிச் சொல்லியாக வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கிராமத்திற்கு அருகில் நிச்சயமாகப் பேருந்துகள் சென்று கொண்டிருக்கும் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். அரை கிலோ மீட்டர், ஒரு கிலோ மீட்டர் தூரத்திலே பேருந்துகள் செல்லாத கிராமங்களே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்தே இந்தக் கேள்வியைக் கேட்கிறார்கள். இருந்தபோதிலும், அந்தப் பகுதியிலே அதிகாரிகளைக் கொண்டு ஆய்வு செய்து, அப்படி ஏதாவது பேருந்து வசதி இல்லாமலிருந்தால், நிச்சயமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அந்தப் பகுதிகளுக்குப் பேருந்து இயக்குவது குறித்துப் பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள்.

திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களையும், எங்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும் வணங்குகின்றேன்.

நத்தம் தொகுதி, நத்தத்திலிருந்து சென்னைக்குச் செல்ல வேண்டுமானால், மதுரை, திண்டுக்கல் சென்று, சென்னைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. பொதுமக்களின் நலன் கருதி, நத்தத்திலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நத்தத்திலிருந்து மதுரைக்கு மக்கள் அதிகம் செல்வதால், மக்கள் நலன் கருதி, நத்தத்திலிருந்து மதுரை, மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் வரை நகரப் பேருந்து இயக்கப்படுமா எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

(முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியான நத்தத்திலிருந்து மதுரைக்கு நகரப் பேருந்துகள் அதிகமாக இயங்கிக் கொண்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நத்தத்திலிருந்து சென்னைக்குப் பேருந்து வேண்டுமென்று கேட்டுள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையைப் பரிசீலித்து, நத்தத்திலிருந்து சென்னைக்குப் பயணம் செய்யக்கூடிய பயணிகளின் அடர்வுக்கேற்ப, பேருந்துகள் இயக்குவது பற்றிப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி அவர்கள்.*

திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூரில் போக்குவரத்துப் பணிமனை அமைக்கப்படும் என இதே அவையில் மாண்புமிகு முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கடந்த 2010 ஆம் ஆண்டு அறிவித்தார்கள். அதற்கான அரசாணையும் வெளியிடப்பட்டது. எனவே, ஆத்தூரில் புதிய பணிமனை அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.*

பஸ் வசதி இல்லாத கிராமங்களுக்கும், குக்கிராமங்களுக்கும் Mini Bus வசதி செய்துதர மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாத கேள்வியைக் கேட்டிருக்கிறார். இதுகுறித்து அவர் தனியாக வினா போட்டால், தகுந்த பதில் அளிப்பதற்குத் தயாராக இருக்கிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 121, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

121—

கால்நடை மருத்துவமனை

***1182—திரு. ஐ.எஸ். இன்பதுரை:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கூடங்குளத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு முதற்கண் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*